சிபாதி 3/5/2/1 சுற்றறிக்கை இல 03/2017

சிவில் பாதுகாப்புத் திணைக்களம்,

பம்பலப்பிட்டி.

2017.02.03

மேலதிகபணிப்பாளர் நாயகம்,
சகல பணிப்பாளர்கள் / பிரதிப் பணிப்பாளர்கள் / உதவிப் பணிப்பாளர்கள்,
தலைமையக பதவிநிலை உத்தியோகத்தர்,
சகல படைப்பிரிவுகளுக்கும் பொறுப்பான கட்டளையிடும் அதிகாரிகள்,
பயிற்சிப் பாடசாலைகளின் கட்டளையிடும் அதிகாரிகள் மற்றும் கருத்திட்டங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள்.

**கழிவு முகாமைத்துவ தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

மேற்படி தலைப்பிலான ஜனாதிபதி செயலாளரின் இல PCMD/PS/02/PCG மற்றும் 2017.01.03 ஆம் திகதிய கடிதம் தொடர்பிலாகும்.

02. மனித செயற்பாடுகள் காரணமாக ஒன்றுசேரும் கழிவுகளை குறைப்பதற்கு உக்கக்கூடிய கழிவுகள் மற்றும் உக்காத கழிவுகள் என வகைப்படுத்தல் அத்தியவசிய மற்றும் காலத்திற்கேற்ற நடவடிக்கையாகும். அதன் மூலம் கழிவுகளை முறையற்ற விதத்தில் அகற்றுவதனால் ஏற்படக் கூடிய சூழல் தாக்கத்தை தடுக்க முடியுமென்பதோடு அதற்காக ஏற்படும் செலவையும் குறைத்துக்கொள்ள முடியும். அதற்கிணங்க, இலங்கையின் சகல அரசாங்க நிறுவனங்களிலும் கழிவுகளை வகைப்படுத்தி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

03. அதற்கிணங்க, பின்வரும் அம்சங்கள் குறித்து தங்களது கவனத்தைச் செலுத்துமாறு அறியத்தருகின்றேன்.

**நிறுவனச் சூழலை தயார்படுத்தல்**

இதன் ஆரம்ப கட்டமாக கழிவுகளை வகைப்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறங்களிலான கழிவுக் கூடைகளை நிலைப்படுத்தல் தொடர்பான திட்டங்களை வகுத்தல் வேண்டும். தேவையான கழிவுக் கூடைகளை அந்தந்த இடங்களுக்கு பொருத்தமான விதத்தில் பயன்படுத்துவதன் மூலம் இந்த செயல்முறையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும். கழிவுக் கூடைகள் வைக்கப்படும் இடங்களில் கழிவுகளை வேறாக்குவதன் அவசியம் மற்றும் கழிவுகளை வேறாக்கும் முறைப் பற்றிய அறிவித்தல் பலகைகளை காட்சிப்படுத்தல் வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் ஊடாக ஆரம்பமாக நிறுவனத்தின் ஊழியர்களை கழிவுகளை வகைப்படுத்தி அகற்றுவதற்கு தயார்படுத்துதல் வேண்டும்.

**அறிவூட்டுதல்**

கழிவுகளை வகைப்படுத்தல் மற்றும் கழிவகற்றல் பற்றிய சிறந்த பயிற்சியை சுத்திகரிப்பு ஊழியர்களுக்கு வழங்குவது அவசியமாகும். அதற்காக செயல்முறை ரீதியாக அவர்களை அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி சிறந்த பயிற்சியையும் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தையும் ஏற்படுத்துதல் வேண்டும். இதன் பின்னர் கழிவுகளை வகைப்படுத்தி அகற்றும் செயற்திட்டம் தொடர்பாக நிறுவனத்தின் சகல உத்தியோகத்தர்களையும் அறிவூட்டுதல் வேண்டும். தற்போது எழுந்துள்ள பிரச்சினை அதன் மூலம் சூழலுக்கு ஏற்பட்டுள்ள தாக்கம், கழிவுகளை வகைப்படுத்துவதன் அவசியம், கழிவுகளை வகைப்படுத்துவதில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறங்கள் மற்றும் கழிவுகளை வகைப்படுத்தும் முறை ஆகிய விடயப் பரப்புக்களை உள்ளடக்கி ஊழியர்களை அறிவூட்டுதல் வேண்டும்.

**<u>கழிவு வகைப்படுத்தலை மேற்பார்வை செய்தல்</u>**

கழிவுகளை வகைப்படுத்தி அகற்றுவதை மேற்பார்வை செய்யும் பொருட்டு ஒரு பிரிவிலிருந்து ஒரு உத்தியோகத்தரை நியமித்து ஒருங்கிணைப்பு நடவடிக்கைக்காக பொருத்தமான ஒரு செயன்முறையை தயாரித்து இந்த செயன்முறை உரிய முறையில் செயற்படுத்தப்படுகின்றதா என்பதை மேற்பார்வை செய்வதற்கும் மாதாந்த கூட்டங்களை நடாத்தி அதன் முன்னேற்றம் தொடர்பாக தேடிப்பார்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

04. திணைக்கள தலைமையகம் / படைப் பிரிவு நிலையங்கள், பயிற்சிப் பாடசாலை வளாகங்கள் என்பவற்றில் உரிய முறையில் கழிவகற்றுவதன் மூலம் சூழலைப் பாதுகாப்பதற்கு தாங்களால் வழங்கப்படும் ஒத்துழைப்பை மிக உயர்வாகக் கருதுகின்றேன். கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் எதிர் காலத்திலும் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட வேண்டுமெனவும் இத்தால் அறியத்தருகின்றேன். அவ்வாறே, அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 24/2016 (பின்னிணைப்பு 01) இன் பிரகாரம் இந்த நிகழ்ச்சித் திட்டம் நாளதுவரைப்படுதப்படுதல் வேண்டுமெனவும் அறியத்தருகின்றேன்.

**சந்திரரத்ன பல்லேகம**

**பணிப்பாளர் நாயகம்**

பிரதிகள்

01. ஜனாதிபதி செயலாளர் - தங்களது PCMD/PS/02/PCG மற்றும் 2017.01.03 ஆம் திகதிய கடிதம் பிரகாரம் தகவலுக்காக

02. செயலாளர், பாதுகாப்பு அமைச்சு.